## பாதெனியா- அநுராதபுரம் வீதி முன்னேற்றச் செயற்திட்டம் - 2015

பாதெனியா- அநுராதபுரம் வீதி முன்னேற்றச் செயற்திட்டத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் பொருளாதார அபிவிருத்தி ஒத்துழைப்பு நிதியத்திற்கான அரசாங்க முகவராக உள்ள கொரிய ஏற்றுமதி இறக்குமதி வங்கிக்கும் இடையில் கைசாத்திடப்பட்ட 2008 திசெம்பர் 19 ஆந் திகதிய எஸ்ஆர்ஜ- 18 ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் I ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

### 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், குறிக்கோள்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், முன்னைய நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் கப்பற்துறை அமைச்சாகவிருந்த தற்போதைய உயர் கல்வி மற்றும் நெடுஞ்சலைகள் அமைச்சு நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் வீதி அபிவிருத்தி அதிகாரசபை செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது. செயற்திட்டத்தின் நோக்கங்களாவன (அ) இலங்கையின் வடமத்திய பிராந்தியத்தில் பிரதான போக்குவரத்து பகுதியில் அமைந்துள்ள பாதெனியா– அநுராதபுரத்திற்கிடையிலான வீதிப் பிரிவை முன்னேற்றுவதன் ஊடாக சமூக கிரயங்களை குறைத்து கைத்தொழில் போட்டியினை உயரத்த்துவதன் மூலம் பிராந்தியத்தின் பொருட்கள் மற்றும் மக்களின் பரிமாற்றத்தை செயற்படுத்துவதும் அதேபோல் தேசிய பொருளாதார அபிவிருத்தி மற்றும் சமப்படுத்தப்பட்ட பிராந்திய அபிவிருத்தி என்பவற்றை உயர்த்துவதையும் மற்றும் (ஆ) கட்டுநாயக்கா – பாதெனியா பிரிவு வீதியை இணைப்பதற்கு திட்டமிடுவதுடன் இது கட்டுநாயக்காவில் அமைந்துள்ள பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையம் மற்றும் கலாச்சார மரபுரிமை மற்றும் சுற்றுலாப் பயணிகளை கவருவதில் செழிப்பாகவுள்ள இலங்கையின் வடமத்திய பிராந்தியம் என்பவற்றிற்கிடையில் பிரயாணிகள் போக்குவரத்து வசதியளிப்பதன் மூலம் இலங்கையினுடைய சுற்றுலாக் கைத்தொழிலின் சர்வதேச போட்டித்தன்மையை வலுப்படுத்துவற்கு நம்பிக்கையளிக்கின்றது. செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்த கிரயம் ரூபா 9,670 மில்லியனானதுடன் அதில் ஐ.அ.டொலர் 55 மில்லியனிற்கு சமமான ரூபா 7,554.03 மில்லியன் பொருளாதார அபிவிருத்தி ஒத்துழைப்பு நிதியத்தால் வழங்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. ஆரம்ப கடன் தொகை 2012 நவம்பர் மாதத்தில் ரூபா 1,232.90 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 11.32 மில்லியன் குறைநிரப்பு கடனால் அதிகரிக்கப்பட்டிருந்தது. செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் 2009 யூலை 01 இல் தொடங்கப்பட்டிருந்ததுடன் 2012 சனவரி 01 அளவில் 30 மாதங்களிற்குள் பூர்த்திசெய்யப்பட வேண்டுமென பட்டியல்படுத்தப்பட்டது. எவ்வாறாயினும், செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் 2012 நவம்பர் 30 இலேயே பூர்த்தியாக்கப்பட்டிருந்த போதிலும் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தன.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக எற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களில் இருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகளிற்கும் முகாமைத்துவம் பொறுப்பாகும்.

### 1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும்

வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக் கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான புத்தகங்கள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தினுடைய நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணங்கியுள்ளதா என்பதும்

(இ) இலங்கை அரசாங்கத்தின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) செயற்திட்டத்தின் அமுலாக்கலுக்காகக் கடைபிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(உ) நிதிக்கூற்றுக்கள் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1. அபிப்பிராயம்

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும்,

(அ) செயற்திட்டமானது 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கீட்டு பதிவடுகளை பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும், மற்றும்

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

வீதி நிர்மாண வேலைகள் 2012 நவம்பர் 30 இல் பூர்த்தியாக்கப்பட்டிருந்த போதிலும் ரூபா 10,639 மில்லியன் தொகையான செயற்திட்டத்தின் மொத்தச் செலவினம் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் நடைபெறும் வேலையின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

**3. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்**

**3.1 நிதிகளின் பயன்பாடு**

நிதியளிப்பு, மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டின் போது மற்றும் 2015 திசெம்பர் 31 வரையான நிதிகளின் பயன்பாடு என்பன தொடர்பான குறிப்பிடத்தக்க சில புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| மூலம் | கடன் உடன்படிக்கையில் நிதியளிப்பதற்கு உடன்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் செய்யப்பட்ட ஒதுக்கீடு | நிதிகளின் பயன்பாடு | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | 2015 ஆம் ஆண்டின் போது | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | |
| | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் |
| ஈடிசீஎவ் | 66.32 | 8,786.93 | - | - | 66.32 | 9,292.15 |
| இலங்கை அரசாங்கம் | - | 2,115.97 | 31.31 | 31.31 | - | 1,335.85 |
| | 66.32 | 10,902.90 | 31.31 | 31.31 | 66.32 | 10,628.00 |

**3.2. பௌதீக முன்னேற்றம்**

வீதி நிர்மாண வேலைகள் பூர்த்தியாக்கப்பட்டிருந்ததுடன் 2012 நவம்பர் 30 இல் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு கையளிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், வீதி நிர்மாண வேலைகளிற்காக சுவீகரிக்கப்பட்ட காணிகளிற்கான இழப்பீட்டுக் கொடுப்பனவுகள் பூர்த்தியாக்கப்பட்டிருக்காமையால், செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் 2015 திசெம்பர் 31 வரை தொடரப்பட்டிருந்தன.

**3.3. காணிச் சுவீகர்ப்பு நடவடிக்கைகள்**

செயற்திட்டத்தால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம், 08 பிரதேச செயலகங்களிலுள்ள குடியிருப்பு காணிகள் உள்ளடங்கலாக 3,996 காணித் துண்டுகள் சுவீகரிக்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது. எவ்வாறாயினும், 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 1,005 காணித் துண்டுகளிற்காக மாத்திரம் இழப்பீடு செலுத்தப்பட்டிருந்தது. அதில், காணிச் சுவீகரிப்பு அதிகாரச்சட்டத்தின் 44 ஆம் பிரிவின் பிரகாரம், காணிப் பதிவு செயலகத்தில் 387 காணித்

துண்டுகள் மாத்திரம் பதிவுசெய்யப்பட்டிருந்தன. மேலும், காணி உரிமையாளர்களிற்கான இழப்பீட்டுக் கொடுப்பனவிலுள்ள கால தாமதங்கள் காரணமாக செயற்த்திட்டத்தால் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 4.93 மில்லியன் தொகையான வட்டி செலுத்தப்பட வேண்டியிருந்தது.

**3.4 சர்ச்சைக்குரிய தன்மையான விடயங்கள்**

செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் 2012 இல் பூர்த்தியாக்கப்பட்டிருந்த போதிலும், வீதி அபிவிருத்தி அதிகாரசபையிடமிருந்து பெறப்பட்ட ரூபா 11.28 மில்லியன் தொகையான விசேட முற்பணமானது தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் 2015 திசெம்பர் 31 இல் நிலுவையாக இருந்தது.